**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.96/2022**

21.01.2026 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.R.பிரமிளா தேவி, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

I.A.No.1/2026 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் பிரதிவாதி சாட்சி 2 சுதர்சனா திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:

உலகநாதனுடன் போக்கியம் ஏற்படுத்திக்கொண்டது என் சகோதரரான முதல் பிரதிவாதி அப்பாதுரை என்றால் ஆமாம். அது சம்மந்தமாக விழுப்புரம் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கில் கண்ட சொத்துக்கள் தான் இந்த அசல் வழக்கில் அயிட்டம் 7 முதல் 9 ஆக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அயிட்டம் 7 முதல் 9 சொத்தக்களை இந்த வழக்கிலிருந்து நீக்கிவிடலாம் என்று வாதி இந்த வழக்கில் குறிப்பு தாக்கல் செய்துள்ளது தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிவாசாஆ.3 முதல் 5 ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் இந்த வழக்கிலும் வாசாஆ.17 பாகப்பிரிவினை பத்திரத்திலும் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். வாதி இந்த வழக்கில் கண்ட சொத்துக்களில் எனக்கும் பாகம் உள்ளது என்று கூறியுள்ளார் என்றால் அப்படி கூறவில்லை. வழக்கு சொத்துக்களில் வாதிக்கு பாகம் உள்ளதா இல்லையா என்றால் வாதிக்கு பாகம் இல்லை, காரணம் வாதிக்கு ஏற்கனவே அதிகமான சொத்து கொடுத்துவிட்டோம். 1ம் பிரதிவாதி சாட்சியத்தில் வழக்கு சொத்துக்களில் வாதிக்கு சேரவேண்டிய பாகத்தை தர

தயார் என்று கூறியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி அவ்வாறு சாட்சியம் அளித்துள்ளதால் இந்த வழக்கில் தோன்றாதரப்பினராக இருந்த நான் தற்போது இந்த வழக்கில் ஆஜராகி வாதிக்கு பாகம் இல்லை என்று எதிர்வழக்காடுகிறேன் என்றால் அது சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

விழுப்புரம் கூடுதல் சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.590/2021ல் இந்த வாதி சகுந்தலா, 3ம் பிரதிவாதியாக இருந்தார் என்றால் சரிதான்.

மறுவிசாணை: இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.